**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 157** **நாள்: 20.05.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் 10ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 89 சதவீத மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.**

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின்கீழ் 206 தொடக்கப்பள்ளிகள், 130 நடுநிலைப் பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 417 பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

2025-26ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 81 சென்னை பள்ளிகளில் பயிலும் 3,570 மாணவர்கள் மற்றும் 3,511 மாணவியர் என மொத்தம் 7,081 மாணவ, மாணவியர் தேர்வு எழுதினர். இதில் 3,115 மாணவர்கள் (87.25%) மற்றும் 3,156 மாணவியர் (89.88%) என மொத்தம் 6,271 மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் 89 ஆகும். இது சென்ற ஆண்டை விட 3 சதவீதம் கூடுதல் ஆகும்.

**பாடவாரியான தேர்ச்சி விகிதத்தில்** தமிழ் பாடத்தில் 1 மாணவர், கணிதம் பாடத்தில் 1 மாணவர், அறிவியல் பாடத்தில் 6 மாணவர்கள், சமூக அறிவியல் பாடத்தில் 5 மாணவர்கள் என மொத்தம் 13 மாணவர்கள் 100/100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

**மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற பள்ளிகள்:**

பெரம்பூர், எம்.எச்.சாலை-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி 500 மதிப்பெண்களுக்கு 495 மதிப்பெண்கள் பெற்று முதலிடத்தையும், எம்.எம்.டி.ஏ.-சென்னை உயர்நிலைப்பள்ளி 494 மதிப்பெண்கள் பெற்று இரண்டாமிடத்தையும், மடுவின்கரை-சென்னை மேல்நிலைப்பள்ளி மற்றும் கீழ்ப்பாக்கம்-சென்னை உயர்நிலைப்பள்ளி ஆகிய 2 பள்ளிகள் 489 மதிப்பெண்கள் பெற்று மூன்றாமிடத்தையும், பெரம்பூர், எம்.எச்.சாலை-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி 488 மதிப்பெண்கள் பெற்று நான்காம் இடத்தையும், ஸ்ட்ராஹன்ஸ் சாலை-சென்னை உயர்நிலைப்பள்ளி மற்றும் புல்லா அவென்யூ-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய 2 பள்ளிகள் 487 மதிப்பெண்கள் பெற்று ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளன.

**மதிப்பெண்கள் அடிப்படையில்** 451 மதிப்பெண்களுக்கு மேல் 153 மாணவ, மாணவியரும், 401 முதல் 450 மதிப்பெண்கள் வரை 578 மாணவ. மாணவியரும், 351 முதல் 400 மதிப்பெண்கள் வரை 1115 மாணவ, மாணவியரும் பெற்றுள்ளனர்.

**100 சதவீத தேர்ச்சி** – திருவொற்றியூர்-காலடிப்பேட்டை, வியாசர்பாடி-கணேசபுரம், நாகப்பன் தெரு-கொய்யாத்தோப்பு, அகரம்-சோமையா ராஜா, அம்பத்தூர்-காமராஜபுரம் மற்றும் கல்லிக்குப்பம், கீழ்ப்பாக்கம்-தியாகப்பா தெரு, சூளைமேடு-டிவி.புரம், திருவல்லிக்கேணி-இருசப்பா, மயிலாப்பூர்-வி.பி.கோயில், வன்னிய தேனாம்பேட்டை மற்றும் கே.பி.தெரு, ராஜா அண்ணாமலைபுரம்-கெனால் பேங்க், கோடம்பாக்கம்-ரங்கராஜபுரம், அசோக்நகர்-கன்னியப்ப நகர், தியாகராயநகர்-கண்ணம்மாபேட்டை, ஆலந்தூர் ஆகிய 17 சென்னை உயர்நிலைப்பள்ளிகள், பழைய வண்ணாரப்பேட்டை-அப்பாசாமி தெரு மற்றும் சூளைமேடு சென்னை மேல்நிலைப்பள்ளிகள், நுங்கம்பாக்கம் சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, வண்ணாரப்பேட்டை-சென்னை உருது உயர்நிலைப்பள்ளி என மொத்தம் 22 சென்னை பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளது.

2025-26ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் தமிழ்நாடு மாநில அளவில் தேர்ச்சி 94.31 சதவீதம் ஆகும். மாநகராட்சி உள்ளிட்ட அரசு பள்ளிகளின் தேர்ச்சி 86.25 சதவீதம். இதில் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகள் தேர்ச்சி 89 சதவீதம். மாநில அளவில் உள்ள 139 மாநகராட்சி பள்ளிகளில் 35 மாநகராட்சிப் பள்ளிகள் 100% தேர்ச்சி பெற்றுள்ளன. இதில் பெருநகர சென்னை மாநகராட்சியில் 22 பள்ளிகள் 100% தேர்ச்சி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரில் மெதுவாக கற்கும் மாணவர்களுக்கு மாலை நேரங்களில் சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு, அவர்கள் சோர்வின்றி படிக்க ஏதுவாக சுண்டல், காபி ஆகியவை வழங்கப்பட்டது. மேலும், மாணவர்கள் எளிதில் கற்கும் வகையில் Easy Learning Material தயார்செய்து அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது. இதுவும் மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் உயர காரணமாகும்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**